©
தமிழ்நாடு அரசு
2019

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 3.20 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 48] சென்னை, புதன்கிழமை, நவம்பர் 27, 2019
கார்த்திகை 11, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2050

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை**

**அறிவிக்கைகள்**

*[அரசாணை (நிலை) எண் 110, சுற்றுச்சூழல் மற்றும் வன(FR.13)த் துறை, 14 அக்டோபர் 2019.]*

தமிழ்நாடு 1882–ஆம் ஆண்டு வனச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 2–ஆம் பிரிவின் கீழ், அரசு இரப்பர் கழகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதிகளைப் பொறுத்த வரையில், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கீழே உள்ள அட்டவணையில் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களை, மேற்சொன்ன சட்டம் மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளின் கீழ், வன அலுவலராக பணிகளை மேற்கொள்வதற்கு அதன் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வன அலுவலர்களாக இதனால் நியமிக்கிறார்.

**அட்டவணை**

| *அரசு இரப்பர் கழகத்தில் பணிபுரியும் நபர்கள்* | *வன அலுவலர்கள்* |
|---|---|
| *(1)* | *(2)* |
| 1. மேலாண் இயக்குநர் | துணை வனப்பாதுகாவலர். |
| 2. இணை மேலாண் இயக்குநர் | உதவி வனப்பாதுகாவலர். |
| 3. பொது மேலாளர் | வனச்சரகர். |

**ஷம்பு கல்லோலிகர்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி(மொழிபெயர்ப்பு)த் துறை.*



Verified RealEstate ™

## தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

### அறிவிக்கைகள்

*[அரசாணை (நிலை) எண் 180, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(K2)த் துறை, 3 அக்டோபர் 2019.]*

1979–ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையே புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் சட்டத்தின் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) (மத்தியச் சட்டம் 30/1979) 3ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், 24.04.1985 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II, பிரிவு 2–இல் 330ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் துறையின் II(2)/LAB/2157/85ஆம் எண் அறிவிக்கையில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார்.

### திருத்தம்

மேற்சொன்ன அறிவிக்கையிலுள்ள விவர அட்டவணையில் இனம் (2) மற்றும் நெடும்பத்தி (1)–இல் அது தொடர்பான பதிவு மற்றும் அதன் நெடும்பத்தி (2)–இல் அது தொடர்பான நிகரான பதிவு ஆகியவற்றுக்குப் பதிலாக பின்வரும் பதிவுகள் முறையே அமைத்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது:–

| | |
|---|---|
| "(2) தொழிலாளர் துறை துணை ஆணையர்கள், தொழிலாளர் துறை இணை ஆணையர்கள் அலுவலகம், சென்னை I மற்றும் II, சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, வேலூர் மற்றும் திண்டுக்கல். | 1972ஆம் ஆண்டு பணிக்கொடை வழங்கல் சட்டத்தின் கீழ் (மத்தியச் சட்டம் 39/1972) அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட உள்ளூர் வரம்பெல்லைகள்". |

### அறிவிக்கை–II

*[அரசாணை (நிலை) எண் 180, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(K2)த் துறை, 3 அக்டோபர் 2019.]*

1979–ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையே புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் சட்டத்தின் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) (மத்தியச் சட்டம் 30/1979) 7ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் 24.04.1985 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II, பிரிவு 2–இல் 330ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் துறையின் II(2)/LAB/2158/85ஆம் எண் அறிவிக்கையில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார்.

### திருத்தம்

மேற்சொன்ன அறிவிக்கையிலுள்ள விவர அட்டவணையில் இனம் (2) மற்றும் நெடும்பத்தி (1)–இல் அது தொடர்பான பதிவு மற்றும் அதன் நெடும்பத்தி (2)–இல் அது தொடர்பான நிகரான பதிவு ஆகியவற்றுக்குப் பதிலாக பின்வரும் பதிவுகள் முறையே அமைத்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது:–

| | |
|---|---|
| "(2) தொழிலாளர் துறை உதவி ஆணையர்கள் (அமலாக்கம்). | 2009 ஆம் ஆண்டு சட்டமுறை எடையளவு சட்டத்தின் கீழ் (மத்தியச் சட்டம் 1/2010) அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட உள்ளூர் வரம்பெல்லைகள்". |

### அறிவிக்கை–III

*[அரசாணை (நிலை) எண் 180, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(K2)த் துறை, 3 அக்டோபர் 2019.]*

1979–ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையே புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் சட்டத்தின் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) (மத்தியச் சட்டம் 30/1979) 11ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் 25.01.2017 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II, பிரிவு 2–இல் 116ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் துறையின் II(2)/தொ.வே./60/2017ஆம் எண் அறிவிக்கையில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார்.

### திருத்தம்

மேற்சொன்ன அறிவிக்கையிலுள்ள விவர அட்டவணையில் இனம் (2) மற்றும் நெடும்பத்தி (1)–இல் அது தொடர்பான பதிவு மற்றும் அதன் நெடும்பத்தி (2)–இல் அது தொடர்பான நிகரான பதிவு ஆகியவற்றுக்குப் பதிலாக பின்வரும் பதிவுகள் முறையே அமைத்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது:–

| | |
|---|---|
| "(3) தொழிலாளர் துறை இணை ஆணையர் | 1970ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்தல் மற்றும் நீக்கல்) சட்டத்தின் கீழ் (மத்தியச் சட்டம் 37/1970) அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட உள்ளூர் வரம்பெல்லைகள்". |

Verified RealEstate

**அறிவிக்கை–IV**

*[அரசாணை (நிலை) எண் 180, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(K2)த் துறை, 3 அக்டோபர் 2019.]*

1979–ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையே புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் சட்டத்தின் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) (மத்தியச் சட்டம் 30/1979) 20ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் 08.03.2000 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II, பிரிவு 2–இல் 124ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் துறையின் II(2)/தொ.வே./252/2000ஆம் எண் அறிவிக்கையில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார்.

**திருத்தம்**

மேற்சொன்ன அறிவிக்கையிலுள்ள விவர அட்டவணையில் இனம் (2) மற்றும் நெடும்பத்தி (1)–இல் அது தொடர்பான பதிவு மற்றும் அதன் நெடும்பத்தி (2)–இல் அது தொடர்பான நிகரான பதிவு ஆகியவற்றுக்குப் பதிலாக பின்வரும் பதிவுகள் முறையே அமைத்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது:–

| *தொடர் எண்* | *நபர்கள்* | *உள்ளூர் வரம்பெல்லைகள்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1. | மலைத்தோட்டத் தலைமை ஆய்வாளர் / தொழிலாளர் துறை கூடுதல் ஆணையர் (நிருவாகம்), சென்னை. | தமிழ்நாடு மாநிலம் முழுவதும். |
| 2. | தொழிலாளர் துறை கூடுதல் ஆணையர் (ஆய்வுகள்), சென்னை. | |
| 3. | தொழிலாளர் துறை இணை ஆணையர்கள்–I மற்றும் II, திருச்சி, மதுரை, திண்டுக்கல், திருநெல்வேலி, சேலம், கோயமுத்தூர், குன்னூர் மற்றும் வேலூர். | 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்தல் மற்றும் நீக்கல்) சட்டத்தின் கீழ் (மத்தியச் சட்டம் 37/1970) அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட உள்ளூர் வரம்பெல்லைகள். |
| 4. | தொழிலாளர் துறை துணை ஆணையர், தொழிலாளர் துறை இணை ஆணையாளர்கள் அலுவலகம் சென்னை–I மற்றும் II, திருச்சி, மதுரை, திண்டுக்கல், திருநெல்வேலி, சேலம், கோயமுத்தூர் மற்றும் வேலூர். | |
| 5. | தொழிலாளர் துறை உதவி ஆணையாளர்கள், (மலைத்தோட்டம்) | 1951 ஆம் ஆண்டு மலைத்தோட்டத் தொழிலாளர் சட்டத்தின் கீழ் (மத்தியச் சட்டம் 69/1951) அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட உள்ளூர் வரம்பெல்லைகளுக்குள். |
| 6. | தொழிலாளர் துறை உதவி ஆணையாளர் (மகளிர் நலன்) திருநெல்வேலி. | திருநெல்வேலி, தூத்துக்குடி விருதுநகர் மற்றும் கன்னியாகுமரி வருவாய் மாவட்டங்கள். |
| 7. | தொழிலாளர் துறை உதவி ஆணையாளர் (மகளிர் நலன்), கோயமுத்தூர். | கோயமுத்தூர் மற்றும் நீலகிரி வருவாய் மாவட்டங்கள். |
| 8. | தொழிலாளர் துறை உதவி ஆணையாளர் (மகளிர் நலன்), சென்னை. | சென்னை, வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் வருவாய் மாவட்டங்கள். |
| 9. | தொழிலாளர் துறை உதவி ஆணையாளர்கள் (அமலாக்கம்) மற்றும் தொழிலாளர் துறை துணை ஆய்வாளர்கள் | 2009ஆம் ஆண்டு சட்டமுறை எடையளவுச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/2010) கீழ் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட உள்ளூர் வரம்பெல்லைகள். |

**முகமது நசிமுத்தீன்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(*தமிழாக்கம்*)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி(மொழிபெயர்ப்பு)த் துறை.*



Verified RealEstate™

*[அரசாணை (நிலை) எண் 183, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H1)த் துறை, 9 அக்டோபர் 2019.]*

**1948**—ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **11/1948**) **13**—ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (a) பகுதி மற்றும் **1976**ஆம் ஆண்டு விற்பனை மேம்பாட்டுப் பணியாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் **11/1976**) **6**ஆம் பிரிவைச் சேர்ந்த **(3)** உட்பிரிவு ஆகியவற்றின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கீழே குறிப்பிட்டுள்ளவாறாக விற்பனை மேம்பாட்டுப் பணியாளர்களின் பணி நேர எண்ணிக்கையை ஒரு நாளில் எட்டு **(8)** மணி நேரமாக இதனால் நிர்ணயிக்கிறார். அதாவது;

| *கால அட்டவணை* | *மதிய உணவு இடைவேளை* | *எழுத்துத்தொடர்பான மற்றும் ஆயத்தப் பணி* |
|---|---|---|
| காலை **9.00** மணி முதல் மாலை **5.00** மணி வரையில் | மதியம் **1.00** மணி முதல் மதியம் **2.00** மணி வரையில் | காலை **9.00** மணி முதல் காலை **10.00** மணி வரையில் |

**குறிப்பு:**

(i) விற்பனை மேம்பாட்டுப் பணியாளர்களின் மிகைப்பணிநேரம் உட்பட ஒரு வாரத்திற்கான மொத்தப் பணி நேர எண்ணிக்கை **54** (ஐம்பத்து நான்கு) மணி நேரத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

(ii) விற்பனை மேம்பாட்டுப் பணியாளர்கள், வழக்கமான ஊதியத்தை விட இரு மடங்காக மிகைநேர ஊதியம் பெற உரிமையுடையவராவார்.

**முகமது நசிமுத்தீன்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி(மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 188, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (K2)த் துறை, 9 அக்டோபர் 2019.]*

**1951**—ஆம் ஆண்டு மலைத்தோட்ட தொழிலாளர் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **69/1951**) **3A**ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும் **23—03—1988**—ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II—பிரிவு—**2**—இல் **183** ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் துறையின் II(2)/LAB/1324/88—ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தொழிலாளர் துறையின் உதவி ஆணையர்களை (மலைத்தோட்டம்) அவர்களின் அந்தந்த அதிகாரவரம்பிற்குட்பட்ட பகுதிக்குள், பதிவு அலுவலர்களாக இதனால் நியமிக்கிறார்.

**அறிவிக்கை—II**

*[அரசாணை (நிலை) எண் 188, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (K2)த் துறை, 9 அக்டோபர் 2019.]*

**1951**—ஆம் ஆண்டு மலைத்தோட்ட தொழிலாளர் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **69/1951**) **16—B**—ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும் **23—03—1988**—ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II—பிரிவு—**2**—இல் **183** ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் துறையின் II(2)/LAB/1325/88—ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தொழிலாளர் துறையின் வட்டார இணை ஆணையர்களை, அவர்களின் அந்தந்த அதிகாரவரம்பிற்குட்பட்ட பகுதிக்குள், **16—A**—ஆம் பிரிவின் கீழ், வழங்கத்தக்க இழப்பீட்டுத் தொகையை நிர்ணயிப்பதற்கு ஆணையர்களாக இதனால் நியமிக்கிறார்.

**அறிவிக்கை—III**

*[அரசாணை (நிலை) எண் 188, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (K2)த் துறை, 9 அக்டோபர் 2019.]*

**1951**—ஆம் ஆண்டு மலைத்தோட்ட தொழிலாளர் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **69/1951**) **4** ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும் **23—05—1984**—ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II—பிரிவு—**2**—இல் **448** ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் துறையின் II(2)/LAB/2868/84—ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு,

Verified RealEstate™

அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், சென்னையில் உள்ள தொழிலாளர் துறை கூடுதல் ஆணையரை (நிருவாகம்), தமிழ்நாட்டு மாநிலத்தின் மலைத்தோட்ட தலைமை ஆய்வாளராக இதனால் நியமிக்கிறார்.

**அறிவிக்கை–IV**

*[அரசாணை (நிலை) எண் 188, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (K2)த் துறை, 9 அக்டோபர் 2019.]*

**1951–ஆம்** ஆண்டு மலைத்தோட்ட தொழிலாளர் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **69/1951**) **4** ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், பொருண்மை குறித்த முந்தைய அறிவிக்கைகள் அனைத்தையும் ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கீழ்க்காணும் அட்டவணையின் நெடும்பத்தி **(2)–ல்** குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் நபர்களை, மேற்சொன்ன சட்டத்தின் நோக்கங்களுக்காக, ஆய்வாளர்களாக இதனால் நியமிக்கிறார். அவர்கள் குறித்த விவரம் வருமாறு:–

**அட்டவணை**

| *தொடர் எண்* | *பதவி / பெயர்* |
|---|---|
| *(1)* | *(2)* |
| 1. | தொழிலாளர் துறை இணை ஆணையர், கோயம்புத்தூர் |
| 2. | தொழிலாளர் துறை இணை ஆணையர், குன்னூர் |
| 3. | தொழிலாளர் துறை இணை ஆணையர், சேலம் |
| 4. | தொழிலாளர் துறை இணை ஆணையர், திண்டுக்கல் |
| 5. | தொழிலாளர் துறை இணை ஆணையர், திருநெல்வேலி |
| 6. | தொழிலாளர் துறை உதவி ஆணையர்(மலைத்தோட்டம்), குன்னூர் |
| 7. | தொழிலாளர் துறை உதவி ஆணையர்(மலைத்தோட்டம்), ஊட்டி |
| 8. | தொழிலாளர் துறை உதவி ஆணையர்(மலைத்தோட்டம்), ஏற்காடு |
| 9. | தொழிலாளர் துறை உதவி ஆணையர்(மலைத்தோட்டம்), நாகர்கோவில் |
| 10. | தொழிலாளர் துறை உதவி ஆணையர்(மலைத்தோட்டம்), வால்பாறை |
| 11. | தொழிலாளர் துறை உதவி ஆணையர்(மலைத்தோட்டம்), கூடலூர் |
| 12. | தொழிலாளர் துறை உதவி ஆணையர்(மலைத்தோட்டம்), வத்தலக்குண்டு |
| 13. | தொழிலாளர் துறை உதவி ஆணையர்(மலைத்தோட்டம்), தேனி |
| 14. | தொழிலாளர் துறை உதவி ஆணையர்(மலைத்தோட்டம்), கோத்தகிரி |
| 15. | தொழிலாளர் துறை உதவி ஆணையர்(மலைத்தோட்டம்), பந்தலூர் |
| 16. | தொழிலாளர் துறை உதவி ஆணையர்(மகளிர் நலன்), திருநெல்வேலி |
| 17. | தொழிலாளர் துறை உதவி ஆணையர்(மகளிர் நலன்), கோயம்புத்தூர். |

**அறிவிக்கை–V**

*[அரசாணை (நிலை) எண் 188, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (K2)த் துறை, 9 அக்டோபர் 2019.]*

**1951–ஆம்** ஆண்டு மலைத்தோட்ட தொழிலாளர் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **69/1951**) **4** ஆம் பிரிவைச் சேர்ந்த **(2)** உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், பொருண்மை குறித்த முந்தைய அறிவிக்கைகள் அனைத்தையும் ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், சென்னையிலுள்ள மலைத்தோட்ட தலைமை ஆய்வாளர், கீழ்க்காணும் அட்டவணையின் நெடும்பத்தி **(2)–ல்** குறிப்பிடப்பட்டுள்ள தொழிலாளர் துறை உதவி ஆணையர் (மலைத்தோட்டம்) பின்வரும் அட்டவணையின் நெடும்பத்தி **(3)–ல்** குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகள் குறித்த நேர்வில், மேற்சொன்ன சட்டத்தின் கீழ், அதிகாரத்தைப் பயன்படுத்துவர் என இதனால் அறிவிக்கிறார். அதன் விவரம் வருமாறு:–

Verified RealEstate™

**அட்டவணை**

| *தொடர் எண்* | *தொழிலாளர் துறை (மலைத்தோட்டம்) உதவி ஆணையரின் பெயர் மற்றும் தலைமையிடங்கள்* | *பகுதிகள்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1. | தொழிலாளர் துறை உதவி ஆணையர்(மலைத்தோட்டம்), ஊட்டி | (1) உதகை வட்டம்<br>1. உதகை குறுவட்டம்(Firka)<br>2. தூனேரி குறுவட்டம்(Firka)<br>3. ஷோலூர் குறுவட்டம்(Firka)<br>(2) குந்தா வட்டம்<br>1. குந்தா குறுவட்டம்(Firka)<br>2. ஈதளர் குறுவட்டம்(Firka) |
| 2. | தொழிலாளர் துறை உதவி ஆணையர்(மலைத்தோட்டம்), குன்னூர். | குன்னூர் வட்டம்<br>1. குன்னூர் நகர குறுவட்டம்(Firka)<br>2. மேலூர் குறுவட்டம்(Firka)<br>3. கேத்தி குறுவட்டம்(Firka) |
| 3. | தொழிலாளர் துறை உதவி ஆணையர்(மலைத்தோட்டம்), கோத்தகிரி. | கோத்தகிரி வட்டம்<br>1. கோத்தகிரி குறுவட்டம்(Firka)<br>2. நெடுகுளா குறுவட்டம்(Firka)<br>3. கீழ்கோத்தகிரி குறுவட்டம்(Firka) |
| 4. | தொழிலாளர் துறை உதவி ஆணையர்(மலைத்தோட்டம்), பந்தலூர். | பந்தலூர் வட்டம்<br>1. நெல்லாக்கோட்டை குறுவட்டம்(Firka)<br>2. சேரம்பாடி குறுவட்டம்(Firka)<br>3. பந்தலூர் குறுவட்டம்(Firka)<br>4. உப்பட்டி குறுவட்டம்(Firka)<br>5. கொல்லபாலி குறுவட்டம்(Firka)<br>6. எரமடு குறுவட்டம்(Firka) |
| 5. | தொழிலாளர் துறை உதவி ஆணையர் (மலைத்தோட்டம்), கூடலூர் | (1) கூடலூர் வட்டம்<br>1. கூடலூர் குறுவட்டம்(Firka)<br>(2) உதகை வட்டம்<br>1. உதகை குறுவட்டம்(Firka) (நடுவட்டம் பகுதி)<br>2. தேவர் சோழா |
| 6. | தொழிலாளர் துறை உதவி ஆணையர் (மலைத்தோட்டம்), ஏற்காடு | சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள். |
| 7. | தொழிலாளர் துறை உதவி ஆணையர் (மலைத்தோட்டம்), நாகர்கோவில் | திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள். |
| 8. | தொழிலாளர் துறை உதவி ஆணையர் (மலைத்தோட்டம்), வத்தலக்குண்டு | திண்டுக்கல் மாவட்டம். |
| 9. | தொழிலாளர் துறை உதவி ஆணையர் (மலைத்தோட்டம்), தேனி | தேனி மற்றும் விருதுநகர் மாவட்டங்கள். |
| 10. | தொழிலாளர் துறை உதவி ஆணையர் (மலைத்தோட்டம்), வால்பாறை | கோயம்புத்தூர் மாவட்டம். |

Verified RealEstate™

| தொடர் எண் | தொழிலாளர் துறை (மலைத்தோட்டம்) உதவி ஆணையரின் பெயர் மற்றும் தலைமையிடங்கள் | பகுதிகள் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 11. | தொழிலாளர் துறை உதவி ஆணையர் (மகளிர் நலன்), திருநெல்வேலி. | திருநெல்வேலி, தூத்துக்குடி கன்னியாகுமரி மற்றும் விருதுநகர் மாவட்டங்கள் |
| 12. | தொழிலாளர் துறை உதவி ஆணையர் (மகளிர் நலன்), கோயம்புத்தூர். | கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள். |

**முகமது நசிமுத்தீன்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி(மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 193, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(K2)த் துறை, 15 அக்டோபர் 2019.]*

1972–ஆம் ஆண்டு பணிக்கொடை வழங்கல் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 39/1972) 7Aஆம் பிரிவைச் சேர்ந்த (1) மற்றும் (2) உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் 23.05.2018 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II, பிரிவு 2–இல் 453ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/தொ.வே./470/2018ஆம் எண் அறிவிக்கையில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார்.

**திருத்தம்**

மேற்சொன்ன அறிவிக்கையிலுள்ள விவர அட்டவணையில் நெடும்பத்தி 1–இல் உள்ள "6.தொழிலாளர் துறை துணை ஆய்வாளர்கள்" மற்றும் அதன் நெடும்பத்தி (2)–இன் நிகரான பதிவிற்குப் பின்னர், பின்வரும் பதிவுகள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். அவையாவன:–

<table>
<tr><td>"7. தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர் (சோதனை மற்றும் பாதுகாப்பு)</td><td rowspan="5">தமிழ்நாடு மாநிலம் முழுவதுமுள்ள தொழிற்சாலைகள்.</td></tr>
<tr><td>8. தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார கூடுதல் இயக்குநர் அலுவலகம், திருச்சி</td></tr>
<tr><td>9. தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார உதவி இயக்குநர் (சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு)</td></tr>
<tr><td>10. தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார உதவி இயக்குநர் (சோதனை மற்றும் பாதுகாப்பு)</td></tr>
<tr><td>11. தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார உதவி இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார கூடுதல் இயக்குநர் அலுவலகம், திருச்சி.</td></tr>
<tr><td>12. தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர்கள்</td><td rowspan="2">1948ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 63/1948) 8ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட உள்ளூர் வரம்பெல்லைகள்.</td></tr>
<tr><td>13. தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார உதவி இயக்குநர்கள்</td></tr>
</table>

**முகமது நசிமுத்தீன்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி(மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

Verified @ RealEstate ™